மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மாதாந்த பயிற்சி வினாத்தாள்

தரம் - 8	கர்நாடக சங்கீதம்	யூலை – 2022

பகுதி-I

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. லலித கலைகளில் சிறந்தது

1) நடனம் 2) நாடகம் 3) சங்கீதம் 4) சிற்பம்

02. இயற்கை ஸ்வரம் என்று அழைக்கப்படுவது

1) விக்ருதி ஸ்வரம் 2) பிரக்ருதி ஸ்வரம் 3) குறில் ஸ்வரம் 4) நெடில் ஸ்வரம்

03. ஸ்ருதியில் கூடி ஒலிக்கும் ஸ்வரம்

1) கோமள ஸ்வரம் 2) மென்ஸ்வரம் 3) தீவிரஸ்வரம் 4) குறைஸ்வரம்

04) ரி,க,ம,த,நி எவ்வகை ஸ்வரங்கள்

1) அசல ஸ்வரங்கள் 2) பிரக்ருதி ஸ்வரங்கள்

3) விக்ருதி ஸ்வரங்கள் 4) மேற்கூறிய யாவும்

05. ஸஸரிரி, ஸாரீ, ஸரிரிக இவ்வாறு அமைக்கப்படுவது

1) சிறிய பாடல் ஆக்கம் 2) சஞ்சார ஆக்கம் 3) மெட்டமைப்பு 4) எதுவுமன்று

06. ஜாதி பேதமடையும் அங்கம்

1) த்ருதம் 2) லகு 3) அனுத்ருதம் 4) புலுதம்

07 மட்டிய தாளத்தின் முன்னால் உள்ள லகுவை நீக்கினால் வரும் தாளம்

1) ஏக தாளம் 2) ஆதி தாளம் 3) ரூபக தாளம் 4) ஜம்பை தாளம்

08. "கணநாதா குணம் நீதா" என்ற சஞ்சாரி கீதத்தினை இயற்றியவர்

1) T.V பிச்சையப்பா 2) N. வீரமணி ஐயர் 3) தட்சணாமூர்த்தி 4) R. றமணி

09. நாட்டார் பாடலின் மறு பெயர்

1) எழுதாக்கவி 2) வாய்மொழி இலக்கியம் 3) பொதுஜனகானம் 4)மேற்கூறிய எல்லாம்

10. O இவ் அடையாளம் குறிப்பது

1) அனுத்ருதம் 2) த்ருதம் 3) லகு 4) குரு

11. பின்வருவனவற்றுள் கிராமிய இசைக் கருவி அல்லாதது

1) பறை 2) உடுக்கு 3) டொல்கி 4) மிருதங்கம்

12. ஒரு அலங்காரம் எடுத்துக்கொள்ளும் ஆவர்த்தனங்கள்

1) 10 2) 05 3) 12 4) 02

13. மேல்ஸ்தாயி வரிசைகள் பாடப்படும் இராகம்

1) மாயாமாளவகௌளை 2) ஆரபி 3) தோடி 4) சங்கராபரணம்

14. சங்கராபரண இராகத்தின் மேள எண்

1)29 2) 51 3) 28 4)15

15. பாஷாங்க இராகம்

1) மலஹரி 2) மோகனம் 3) பிலஹரி 4) கல்யாணி

16. சுத்தாங்கமாகப் பாடப்படும் உருப்படி

1) கீதம் 2) தேவாரம் 3) வெண்பா 4) திருப்புகழ்

17. பந்துவராளி இராகத்துக்குரிய பண்

1) பூபாளம் 2) செந்துருத்தி 3) நட்டராகம் 4) இந்தளம்

18. சதுஸ்ரஜாதி மட்டிய தாளத்தின் மொத்த அட்சரம்

1) 06 2) 08 3) 10 4) 12

19. 10 வது ஸ்வரஸ்தானமாக அமைவது

1) காகலி நிஷாதம் 2) சுத்த தைவதம்

3) கைசிகி நிஷாதம் 4) சதுஸ்ருதி தைவதம்

20. இரட்டை வரிசை என அழைக்கப்படுவது

1) ஸ்வர வரிசை 2) ஜண்டை வரிசை

3) மேல்ஸ்தாயி வரிசை 4) தாட்டு வரிசை

(20 x2= 40 புள்ளிகள்)

பகுதி-II

விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (1) சதுஸ்ர ஜாதி ரூபக தாளத்தின் அங்க அடையாளம் யாது?

(2) இதன் மொத்த அட்சரம் யாது?

(3) அப்பியாச வரிசைகள் 3 தருக.

(4) சதுஸ்ர ஜாதி ரூபக தாளத்தினை இராகம், தாளம், இயற்றியவர் ஆரோகணம், அவரோகணம், அங்க அடையாளங்கள் (அங்கமுடிவு ஆவர்த்தன் முடிவு) ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதுக. (1+1+3+10 = 15 புள்ளிகள்)

02. (1) ஸ்வரங்கள் எத்தனை?

(2) அவை எவை?

(3) பிரக்ருதி, விக்ருதி ஸ்வரங்களுக்கு உதாரணம் தருக

(4) 12 ஸ்வரஸ்தானங்களையும் ஒழுங்காக அட்டவணைப்படுத்துக.

(1+2+2+10 = 15 புள்ளிகள்)

03. (1) நாட்டார் பாடல் என்றால் என்ன?

(2) நாட்டார் பாடலுக்குரிய வேறு பெயர்கள் 3 தருக?

(3) நாட்டார் பாடலுக்கு உதாரணம் 3 தருக?

(4) நாட்டார் பாடல் பாடப்படும் இராகங்கள் 3 தருக

(5) மட்டக்களப்புப் பகுதியில் பாடப்படும் பாடல்கள் எவை?

(3+3+3+3+3=15 புள்ளிகள்)

04. (1) அப்பியாசகான உருப்படிகளில் முதன்முதலில் சாகித்திய ரூபமாகக் கற்கும் உருப்படி எது?

(2) இதன் வேறு பெயர்கள் எவை?

(1) இவ் உருப்படியை அலங்கரிக்கும் சொற்களை எவ்வாறு அழைப்பர்?.

(4) இவை இயற்றப்படும் மொழிகள் எவை?

(5) இவ்வுருப்படி வகைகளை விளக்குக.

(2+2+2+3+6-15 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(1) லகு

(2) தீவிர ஸ்வரம்

(3) பிரக்ருதி ஸ்வரம்

(5+5+5=15 புள்ளிகள்)